Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தொகுதி - 6 | நாளிதழ் | 10 பக்கங்கள் சென்னை, 29 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 140

சணல் மூலப்பொருள்களை இருப்பு வைக்க புதிய கட்டுப்பாடு: விவசாயிகள், உற்பத்தியாளர்களின் நலனைக் காக்க மத்திய அரசு நடவடிக்கை

சென்னை – 29 நவம்பர், 2026 சணல் மூலப்பொருள்களை இருப்பு வைக்க புதிய கட்டுப்பாடு: விவசாயிகள், உற்பத்தியாளர்களின் நலனைக் காக்க மத்திய அரசு நடவடிக்கை.

சணல் மூலப்பொருள்களை இருப்பு வைப்பதற்கு புதிய உச்சவரம்புகளை மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சணல் ஆணையம் விதித்துள்ளது. இதற்கான உத்தரவு நேற்று (2026 நவம்பர் 27) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சணல் சந்தையில் விலை ஏற்ற இறக்கத்தைத் தடுக்கவும், மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்படாமல் பாதுகாக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, சணல் கட்டும் இயந்திரம் உள்ள இடத்தில், அதிகபட்சம் 1,000 குவிண்டால் சணல் வைத்திருக்கலாம். பிற பதிவு செய்த இருப்பு வைப்பாளர்கள் 100 குவிண்டால் வரை வைத்திருக்கலாம். பதிவு செய்யாதவர்கள் அல்லது இருப்பு விவரங்களைச் சமர்ப்பிக்காதவர்கள் 5 குவிண்டால் மட்டுமே வைத்திருக்க முடியும். சணல் ஆலைகள் தங்களின் தற்போதைய உற்பத்தி அளவின்படி 90 நாட்களுக்குத் தேவையான சணலை இருப்பு வைக்கலாம்.

அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக இருப்பு வைத்திருப்பவர்கள், டிசம்பர் 10-ம் தேதிக்குள் கூடுதல் சணலை விற்க வேண்டும்.

அனைத்து இருப்பு வைப்பாளர்களும் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஜூட் ஸ்மார்ட் (Jute SMART) இணையதளத்தில் இருப்பு விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும். விதிகளை மீறுவோரின் கிடங்குகளில் சோதனை நடத்தவும், சணலைப் பறிமுதல் செய்யவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதிமீறலுக்கு சிறைத் தண்டனையுடன், அபராதமும் விதிக்கப்படும். இந்த நடவடிக்கை சணல் விவசாயிகள், உற்பத்தியாளர்கள், நுகர்வோர் ஆகியோரின் நலனைக் காக்க உதவும்.